முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண்.261/2020

இன்று 2025 ம் ஆண்டு ஜுன் திங்கள் 17ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரூசோ என்கிற கார்த்திக் | தொழில் | : | ஒர்க் சாப் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | தங்கவேல் | கிராமம் | : | நெருப்பெரிச்சல் |
| வயது | : | 58 | தாலூக்கா | : | திருப்பூர் |
| நாள் | : | 17.06.2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1, 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் என் சகோதர சகோதரிகள் என்றால் சரிதான். தாவாச் சொத்து ஆதியில் சுப்பையா செட்டியாருக்கு பாத்தியம் என்றால் சரிதான். சுப்பையா செட்டியாருக்கு 3 மகன்களும், 2 மகள்கள் அவரது மனைவி இருந்தார்கள். சுப்பையா செட்டியார் பொது குடும்ப வருமானத்தில் இருந்து தான் தாவாச் சொத்தை கிரயம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொது குடும்ப ஒப்பந்தத்தின்படி தாவாச் சொத்து பாலசுப்பிரமணியம், தங்கவேலுக்கு சுவாதீனம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.4ன்படி சொத்துக்கள் பாலசுப்பிரமணியம், தங்கவேலுடைய சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்ததால், சுப்பையா செட்டியாரின் மற்ற வாரிசுகள் பாலசுப்பிரமணியம், தங்கவேலுக்கு விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கள் பொதுக் குடும்பச் சொத்துக்கள் என்பதால், வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4 விடுதலை ஆவணம் பற்றிய விவரங்களை எனது வாதுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. பாலசுப்பிரமணியம் தங்கவேலு இடையே 23.06.1982ம் ஆண்டு வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் பிதுராஜித வகையிலும், விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்த வகையிலும் சொத்து பாத்தியம் என கண்டுள்ளது என்றால் பிதுராஜித வகையில் என எழுதப்பட்டுள்ளது. அதன்படி தான் சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். பாலசுப்பிரமணியம், தங்கவேலும் தாவாச் சொத்தை பொதுக் குடுமபச் சொத்தாக கருதி தான் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். ஆனால் பணம் கொடுத்து தான் வாங்கினார்கள்.

4. பாகப்பிரிவினை படி தங்கவேலு சுவாதீன அனுபவத்தில் இருந்தார். தங்கவேலுக்கு நானும், என் தாயாரும், பிரதிவாதிகளும் வாரிசுகள். நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக தாவாச் சொத்தில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு திருமணமாகி அவர் அவருடைய கணவர் வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எங்களுடன் இருந்தார். அவருக்கு திருமணமாகவில்லை. அவர் ஊனமுற்றவராக இருந்தார் என்றால் தற்போது தான் கால் உடைந்து விட்டது. கடந்த 2016ம் ஆண்டு என் அப்பா தங்கவேலுக்கு சுமார் 84 வயது இருக்கும்.

5. என் அப்பா தங்கவேலுக்கு வயதாகி விட்ட காரணத்தால் அவர் சுயமாக யோசிக்க முடியாத நிலையில் இருந்தார் என்றால் சரியல்ல. எனக்கு திருமணமான உடன் என் மாமியார் வீட்டில் கூத்தம்பாளையத்தில் இருந்தேன். எனக்கும் என் அப்பாவிற்கும் சுமூகமான உறவு இல்லை என்றால் சரியல்ல. என் அம்மா கடந்த 2014ம் ஆண்டு இறந்து விட்டார். 01.07.2016ம் தேதியில் என் அப்பா சுய நினைவு இல்லாத நிலையில் அவரை அழைத்து சென்று அவர் கையொப்பம் பெற்று வா.சா.ஆ.6 ஆவணம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.6 ஆவணத்தில் கண்டுள்ள விவரங்கள் தெரியாமல் தான் என் அப்பா கையெழுத்து செய்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணம் என் அப்பாவிற்கு சுய நினைவு இல்லாத நிலையில் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால் வா.சா.ஆ.6

செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாச் சொத்து பொதுக் குடும்பச் சொத்து என்பதால், எனக்கும் என் அப்பாவிற்கும் பிரதிவாதிகளுக்கும் 4ல் 1 பங்கு பாத்தியம் என்றால் சரியல்ல. அது என்னுடைய சொத்தாகும்.

7. என் அப்பாவிற்கு தாவாச் சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவை நான் சரிவர கவனிக்காமல் இருந்து வந்ததால், என் அப்பாவை ஏமாற்றி நான் தாவாச் சொத்தை எழுதி பெற்றேன் என்று என் அப்பா அறிந்து செட்டில்மெண்ட் ஆவணத்தை வா.சா.ஆ.7 மூலம் ரத்து செய்து விட்டார் என்றால் சரியல்ல. என் அப்பா வாங்கிய கடனை எல்லாம் நான் தான் அடைத்தேன். என் அப்பாவிற்கு யூரின் பேக் வைத்து இருந்ததை நான் தான் எடுத்து என் அப்பாவிற்கு அறுவை சிகிச்சை செய்தேன். கடந்த 2012ம் ஆண்டு எங்கள் வீட்டை சீல் வைத்து விட்டார்கள் நான் தான் அதை சரி செய்தேன். கடன் எல்லாம் பெற்று அனைத்தையும் சரி செய்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.7 ஆவணம் செல்லத்தக்கது என்றும், என் அப்பா எனக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.6 ஆவணம் ரத்தாகி விட்டது என்றால் சரியல்ல. கடந்த 25.08.2016ம் தேதியில் என் அப்பா பிரதிவாதிகள் பெயருக்கு தகுந்த பிரதிபிரயோசனத்தின் பேரில் தாவாச் சொத்தின் வடபுறத்தில் ஒரு பகுதியை வா.சா.ஆ.11 ஆவணத்தின் மூலம் கிரயம் செய்து கொடுத்து விட்டார் என்றால் சரிதான். ஆனால் அசல் ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் தான் உள்ளது.

9. என் அப்பா உயிருடன் இருந்தபோதும் அதற்கு பிறகும் தாவாச் சொத்தில் நான் 4ல் 1 பாகம் தான் உரிமை கோர முடியும் முழுச் சொத்தையும் நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாகத்தின் மூலமாகவும், கிரயம் செய்ததன் அடிப்படையிலும் 4ல் 3 பாகம் பாத்தியம் என்றால் சரியல்ல. என் சகோதரர் வேலை இல்லாமல் இருக்கிறார் என்றால் சரியல்ல. பொய்யாக ஆவணம் எழுதிக் கொண்டு தாவாச் சொத்தில் பொய்யாக உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. தாவா

தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து பொதுக் குடும்பச் சொத்து அதனால் நான் முழுச் சொத்தையும் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவாச் சொத்தின் சுவாதீன அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/–A.Vanitha
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.